# திருவண்ணாமலை மன்னன் வல்லாளன்

# King
# Vallalan of Tiruvannamalai

**(Parts of this article were first published in *The Mountain Path*, 1990, pp. 64-71**
**இந்த கட்டுரையின் சில பகுதிகள் முதலில்**
**மலை வழி -1990, பக். 64-71 என்ற இதழில் வெளியாயிற்று)**

**மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்**
**டேவிட் காட்மன்**

**Original in English**
**DAVID GODMAN**

**தமிழ் மொழி பெயர்ப்பு**
**சாந்திப்பிரியா**
**(nrj_1945@yahoo.com)**

**Tamil Translation**
**SANTHIPRIYA**
**(nrj_1945@yahoo.com)**

# திருவண்ணாமலை மன்னன் வல்லாளன்

## பாகம்-1

1292 முதல் 1342 வரை ஹோய்சாலா என்ற சம்ராஜ்ஜியத்தை வீர வல்லாளன் III என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுடைய சாம்ராஜ்யம் தென் இந்தியாவின் பெரும் பகுதியை உள்ளடக்கி இருந்தது. தட்சிண பூமியில் இருந்த தலை நகரமான துவாரசமுத்திரா வரை அவன் ஆட்சி விரிந்து இருந்தது. அது இப்பொழுது வடமேற்கு மைசூரில் ஹலிபிட் என்று அழைக்கப்படும் சிறு நகரமாகவே உள்ளது. அந்த நகரம் இப்பொழுது நலிந்து விட்டிருந்தாலும் இன்றும் ஹோய்சாலா பரம்பரையின் கலாசார மேன்மைகளை பறை சாற்றிக் கொண்டு உள்ளது. அந்த சம்ராஜ்ஜியத்தை சுற்றி இருந்த இடங்கள் வலிமை இன்றி இருந்த பொழுது அதன் ஆதிக்கம் கர்நாடகாவின் பெரும் பகுதிகள், வடக்கு ஆந்திரா, மற்றும் வடக்கு தமிழ்நாடு போன்றவற்றை உள்ளடக்கி இருந்தன.

எல்லப்ப நாயனார் என்பவர் பதினாறாவது நூற்றாண்டில் எழுதி இருக்கும் அருணாசல மகாத்மியம் என்ற தமிழ் நூலின் ஏழாவது பாகத்தில், மன்னன் வீர வல்லாளனுடைய கடவுள் பக்தி மற்றும் கடமை உணர்வு பற்றி நிறைய கூறப்பட்டு உள்ளது. அந்த நூல் அதற்கு பல வருடங்களுக்கு முன்பாக சமிஸ்கிருத மொழியில் இயற்றப்பட்டுள்ள அருணாசல மகாத்மியம் என்ற நூலினை பின்னணியாகக் கொண்டு இயற்றப்பட்டிருந்தாலும் வீர வல்லாளனைப் பற்றி தமிழ் பதிப்பில்தான் அவனைப் பற்றிய செய்தி உள்ளது. அந்த மன்னன்

**திருவண்ணாமலை மன்னன் வல்லாளன்**

**King Vallalan of Tiruvannamalai**

(Parts of this article were first published in The Mountain Path, 1990, pp. 64-71

இந்த கட்டுரையின் சில பகுதிகள் முதலில் மலை வழி-1990, பக். 64-71 என்ற இதழில் வெளியாயிற்று)

**மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்**

-----------------------

**டேவிட் காட்மன்**
**(DAVID GODMAN)**

**தமிழ் மொழி பெயர்ப்பு**

-------------------------

**சாந்திப்பிரியா**
**(SANTHIPRIYA)**
(nrj_1945@yahoo.com)

திருவண்ணாமலை மக்களால் ஏன் பெரிதும் போற்றப்பட்டார் என்பதும், அங்கு வந்து அவர் ஏன் தங்க நேரிட்டது என்பது பற்றீ அறிந்து கொள்ளும் முன் அவருடைய குடும்பத்தைப் பற்றி முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

வீர வல்லாளனுடைய பாட்டனார் சோமேஸ்வரா என்பவர். 1233 முதல் 67 வரை ஆட்சியில் இருந்தவர். அவருக்கு முன் இருந்த மன்னன் யுத்தங்களில் தோல்வியுற்று இழந்திருந்த பல பகுதிகளை திரும்பப் பிடித்து ஆட்சி செய்து வந்தவர். மகராஷ்டிர மானிலத்தில் பண்டார்பூர் என்ற இடம் வரை தனது ஆட்சியை நிலை நிறுத்தி இருந்தார். அங்குள்ள விட்டலா ஆலயத்தை அவரே தானம் செய்தவர். பின் ஒரு காலத்தில் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் அண்டைய மானிலத்து மன்னர்களின் படையெடுப்பு இருந்தது. மதுரையில் இருந்த சுந்தர பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் தெற்கு பகுதியில் மகதா எனப்பட்ட திருவண்ணாமலை வரை பல பகுதிகளை பிடித்துக் கொண்டான். அது தென் ஆற்காட்டின் சில பகுதிகளையும் வட ஆற்காடு முழுவதையும் அடக்கிக் கொண்ட பகுதி ஆகும்.

தனது இறுதி நாட்களில் சோமேஸ்வரா தன்னுடைய நாட்டினை தனது இரண்டு புதல்வர்களுக்கும் பிரித்துக் கொடுத்து விட்டார். நரசிம்மா என்ற மகனுக்கு வடக்கில் இருந்த தலை நகரமான துவாரசமுத்திரா வரையிலும், திருச்சி நகரில் இருந்து பதினைந்து கிலோ துாரத்தில் உள்ள கண்ணனூர் என்ற பகுதி வரை இருந்த சிறிய பகுதியை இராமநாதன் என்ற மகனுக்கும் தந்திருந்தார். 1279 ஆம் ஆண்டு வாக்கில் மதுரையில் இருந்த பாண்டிய மன்னனான குலசேகரன் இராமநாதனிடம் இருந்த பல பகுதிகளை பிடித்துக் கொள்ள, இராமனாதன் தன்னுடைய சகோதரனுடைய சில பகுதிகளை பிடித்துக் கொண்டான். ஆனால் அதில் பெங்களூரில் இருந்த சில பகுதிகளை மட்டுமே அவனால் பிடித்துக் கொள்ள முடிந்தது.

1291 ஆம் ஆண்டில் நரசிம்மன் இறந்து போனார்.



**அருணாசலேஸ்வரா ஆலயத்தில் உள்ள கோபுரத்தில் உள்ள மன்னன் வல்லாளனுடைய உருவச் சிலை**

வல்லாளன் அந்த இராஜ்ய பரிபாலனத்தை ஏற்றார். அவருக்கு 30 வயதான பொழுது அதாவது 1292 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி பதவியில் அமர்ந்தார். அவருடைய எண்பது வயதுவரை ஆட்சியில் இருந்தார்.




**ஹோய்சலா மன்னர்களின் வம்ச மரம். அது 1022 ஆம் ஆண்டு துவங்கி விருபக்ஷ வல்லவன் IV னுடன் முடிந்தது.**

அதே சமயத்தில் தெற்கு பகுதிகளை ஆண்டு வந்த ஹோய்சலா மன்னனான இராமநாதனும் அவனுடைய மகன்களும் வல்லாளன் பதவி ஏற்ற பொழுது அதற்கு எதிர்பு தெரிவிக்கவில்லை என்றாலும் அவர்கள் அவர் மீது மனதில் பொறாமையுடன் இருந்தனர். 1300 ஆம் ஆண்டு விஸ்வநாதன் மரணம் அடைந்ததும் ஹோசலா ஆட்சிப் பகுதிகள் அனைத்தையும் மன்னன் வல்லாளன் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து விட்டார்.

வல்லாளன் தனது குடும்ப ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளை முன்னமே தான் இணைத்துக் கொள்ள விரும்பி இருந்தாலும் அவசரப்படாமல் அதற்கான தருமணத்தை எதிர் பார்த்துக் காத்து இருந்தார். 1310 ஆம் ஆண்டு அதற்கான தருமணம் வந்தது. தெற்கு பகுதிகளில் இருந்த சோழ, பாண்டிய மன்னர்களுடன் பாட்டனார் சோமேஸ்வரா திருமண சம்மந்தம் செய்து செய்து கொண்டு இருந்திருந்தார். பாண்டிய மன்னன் வேண்டுகோளை எற்றுக்



கொண்டு அவனுடைய பகுதிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க தனது படைகளை தெற்கு பகுதியில் அனுப்பிய பொழுது வட பகுதியில் தான் வலு இழந்து விட்டதை அவர் உணரவில்லை.

1311 ஆம் ஆண்டில் டில்லி சுல்தான் அல்லாவுத்தின் கில்ஜி என்பவன் தெற்கு பகுதிகளில் படையெடுத்து அவைகளைப் பிடிக்க தன்னுடைய படை தலைவனான மாலிக்கப்பூர் என்பவனை படையுடன் அனுப்பினான். ஹோய்சாலா மன்னன் தென் பகுதிகளில் தங்கி உள்ளான் என்பதைத் தெரிந்து கொண்ட மாலிக்கப்பூர் வடக்குப் பகுதிகளில் படை எடுத்தபடி முன்னேறி அங்கு கொள்ளை அடித்துக் கொண்டு வந்தான். அதைக் கண்ட வல்லாளன் துவாரசமுத்திரத்திற்கு படைகளை திரட்டி வந்த பொழுது காலம் கடந்து விட்டது. மாலிக்கப்பூர் அங்கு பலத்த ஏற்பாடுகளுடன் காத்துக் கொண்டு இருந்ததினால் மன்னன் வந்தவுடனேயே தோல்வியைத் தழுவி சரண் அடைய வேண்டியதாயிற்று.

டில்லி சம்ராஜ்யத்தை அங்கு நிலவ மாலிக்கப்பூர் விரும்பவில்லை. அவன் நோக்கமே படை எடுத்து பொருட்களைக் கொள்ளையடிக்கவே வந்திருந்ததினால், வல்லாளனின் படையில் இருந்த குதிரைகள், யானைகள், பொக்கிஷங்கள் என அனைத்தையும் பிடுங்கிக் கொண்டு சென்றான். ஒரு கதையின்படி அந்த மன்னன் தன்னிடம் இருந்த அனைத்தையும் மாலிக்கப்பூர் ஏற்பாடு செய்து இருந்த சரண் அடையும் நிகழ்ச்சியில் கொடுத்து விட்டு பூணுலை மட்டும் தோளில் மாட்டிக் கொண்டு நிர்வாணமாக திரும்பிச் சென்றார். அது மட்டும் அல்ல ஒவ்ஒருவருடமும் சுல்தானுக்கு கப்பம் கட்டுவதாக ஒப்புக் கொண்டதினால் அவர் மீண்டும் ஹோசலதாவை ஆண்டு கொள்ள அனுமதிக்கப்பட்டார். வேறு வழி இன்றி வல்லாளனும் அதற்கு ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. மதுரைவரை சென்ற மாலிக்கின் படைகள் அனைத்து இடங்களிலும் வெற்றி பெற்று 612 யானைகள், 96,000 தங்க நாணயங்கள், பல பெட்டி நகைகள், பொருட்கள்,



பவழங்கள், முத்துக்கள் மற்றும் 20,000 குதிரைகள் என அனைத்தையும் கொள்ளயடித்துச் சென்றான்.

அவனுடைய தீரும்பிச் செல்லும் பயணம் ஒரு வருடம் பயங்கர எதிர்ப்பு தெரிவித்த இந்து மன்னர்களால் தடைபட்டது. ஆனாலும் தான் கொள்ளயடித்த பொருட்களை ஜாக்கிரதையாக பாதுகாத்த வண்ணம் ஒரு வருடம் மதுரையில் சண்டை போட்டப் பின் திரும்பிச் சென்றான்.

மாலிக் கபூர் திரும்பிச் சென்ற பின் மன்னன் வல்லாளன் சுந்தர பாண்டியனின் வேண்டுகோளை ஏற்று அவனுக்கு உதவச் சென்றான். அதனால் மனம் மகிழ்ந்த அந்த மன்னன் வல்லாளனுக்கு தொண்டை மண்டலத்தில் சில இடங்கள்வரை ஆள வழி செய்தான். அது அண்ணாமலை ராஸ்தா என்ற பெயரில் அண்ணாமலையை சுற்றி அமைந்து இருந்தது. 1315 அல்லது 1316 ல் அருண சமுத்திரா என்ற பெயரில் திருவண்ணாமலையை தலைநகராகக் கொண்டு அதை ஆளத் துவங்கினான். 1317 ஆம் ஆண்டினைச் சார்ந்த கல்வெட்டு ஒன்றில் அதை தென்னக தலைநகரம் என மன்னன் அறிவித்துக் கொண்டதாகவும், பல நன்கொடைகளையும் அந்த ஆலயத்திற்கு தந்தான் என்றும் தெரிவித்தது.

இன்னும் நிறைய பகுதிகளை நிர்வாகிக்க வேண்டி இருந்ததினால் மன்னன் வல்லாளனுக்கு நிறைய நேரம் ஒதுக்க முடியவில்லை. வடக்கு பகுதியில் காம்பிளி என்ற மன்னனுடன் அடிக்கடி மோதல் ஏற்பட்டது. பல இடங்களில் அவன் முஸ்லிம் மன்னர்களுக்கு எதிரான அணி திரட்டி அதில் வெற்றி பெற்றான். அதில் ஒரு பகுதியாக ஆந்திராவில் தெலுங்கான பகுதியில் இருந்த முஸ்லிம் மன்னனை தோற்கடித்து அவனை டில்லிக்குத் துரத்தி அடித்தான். தெற்கு பகுதியில் பாண்டிய நாட்டு பகுதிகளை ஆக்கரமித்திருந்த முஸ்லிம் மன்னனையும் அடித்துத் துரத்தினான். அந்த இடத்தினை நிர்வாகிக்க சம்புவராய வம்சத்தைச் சேர்ந்த பண்ணைத் தலைவனை அதிபதியாக அறிவித்தான்.



இப்படியாக தன்னுடைய சமயோஜிதமான காரியங்கள், படைபலம், திறமையான கூட்டணி போன்றவற்றைக் கைகொண்டு வல்லாளன் ஹோசலா பேரரசை முஸ்லிம் மன்னர்களின் எதிர்ப்பில் இருந்து பாதுகாத்துக் கொண்டான். மற்ற இடங்களில் பெரும் பகுதிகள் முஸ்லிம் வசமாயிற்று. ஆனால் தெற்கில் சுற்றிலும் முஸ்லிம் ஆட்சியினரால் சூழப்பட்டு இருந்தும் ஹோசலா பேரரசு மட்டும் இந்து இராஜ்ஜியமாக விளங்கியது.

அதனால் டில்லி சுல்தானுடன் சிறு சிறு ஒப்பந்தங்கள் அவ்வப் பொழுது எற்படுத்திக் கொள்ள, அவனை இராஜ்ய பரிபாலனம் செய்து கொள்ள தடையின்றி அனுமதித்திருந்தான் அந்த டில்லி சுல்தான். ஆனால் அந்த நாட்டை சுல்தானுக்கு கீழ் படிந்திருந்த நாடாகவே இருககும் நிலையை வல்லாளன் ஏற்றுக் கொள்ள வேண்டி இருந்தது. ஆனாலும் அந்த கூட்டணி துவார சமுத்திராவை காப்பாற்ற முடியவில்லை. 1327 ஆம் ஆண்டில் டில்லியின் சுல்தான் முகமது பின் துக்ளக் என்பவன் அதன் மீது படையெடுத்த வந்து அதை அழித்தான். அதனால் அடுத்த 15 ஆண்டுகள் வல்லாளன் திருவண்ணாமலையில் தங்கி அங்கிருந்துதான் தன் ஆட்சியை நடத்தி வரவேண்டி இருந்தது.

இந்த பின்னணியில் திருவண்ணாமலை மன்னன் வல்லாளன் மற்றும் அவனுடைய செயல்கள் என்ன என்பவன குறித்து அருணாசல புராணம் கூறி உள்ளதை இனி பார்க்கலாம்.



**பக்கம்-6**



இனி மன்னன் வல்லாளனுக்கு கடவுளே பிள்ளையாக தோன்றி அவருக்கு வேண்டிய வரங்கள் அனைத்தையும் தந்தார் என்ற கதையை காணலாம்

453

திருவண்ணாமலையில் அருணை என்ற இடத்தில் அற்புதமான தோட்டங்கள் சூழப்பட்ட, பழம் கனிகள் பூத்துக் குலுங்கும், வைர வைடூரியங்கள் பதித்து நகைகளால் மின்னும் பெரும் அரண்மனை உள்ளது. அந்த இடத்தில் வசிஷ்டரின் மனைவியின் கற்புக்கு இணையான தேவதாசிகள் இருந்தனர்

454

பொய்யே பேசாத, நற்குணங்கள் அனைத்தும் நிரம்பிய, மிக அதிக பக்தி கொண்டவனான வல்லாளன் என்ற மன்னன் தன்னைப் போலவே மற்ற அனைவரையும் நினைத்தவன் , அக்னி வம்சத்தை சார்ந்தவன். அவன் பெருமைகளைக் கூற முடியாத அளவில் இருந்தவன். தினமும் ஆலயத்திற்கு சென்று பரமேஸ்வரனை துதித்தான்.

தங்களுடைய வம்சம் சந்திரன், சூரியன் மற்றும் அக்னி என்று பறை சாற்றிக் கொள்வதில் அனைத்து வம்சத்தினருக்கும் பெருமை இருந்தது. ஏன் எனில் அப்படிப்பட்ட வம்சத்தில் தோன்றியவர்கள்தாம் பெரும் புகழ் பெற்று விளங்கினர். எல்லப்ப நாயனார் மன்னன் வல்லாளனை அக்னி வம்சத்தை சேர்ந்தவர் எனக் கூறியதை மன்னன் வல்லாளன் ஏற்கவில்லை. தன்னை சந்திர வம்சத்தைச் சேர்ந்தவன் என்றே கூறிக் கொண்டான்.

அதற்கு ஆதாரமாக ஒரு கல்வெட்டில் உள்ள செய்தி இது. கல்வெட்டுக்கள்தாம் முந்தைய காலத்திய நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டும் விதத்தில் அமைந்து உள்ள ஆதாரங்கள். அவை பதிவு அலுவலகம் போல முன் காலத்தில் இருந்தன. நிலங்களை நன்கொடை செய்தது, மாற்றி உஎழுதியது, பறித்தது போன்ற அனைத்து



நிகழ்ச்சிகளும் அவற்றில் பொறிக்கப்பட்டு இருந்தன. திருவண்ணாமலை ஆலயத்தில் அப்படிப்பட்ட கல்வெட்டுக்கள் நிறையவே உள்ளன. 9 ஆம் நூற்றாண்டு நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டின. அந்த நூற்றாண்டு தான் மன்னன் வல்லாளன் ( 301-309) ஆட்சியில் அமர்ந்திருந்த காலம் ஆகும். 1980 ஆம் ஆண்டு கிடைத்த 301 ஆம் எண் கல்வெட்டு அதில் மிக முக்கியமானது. 1317 ஆம் ஆண்டை சேர்ந்த அதில் மன்னன் வல்லாளனின் பெருமை, அவருடைய வம்சம் போன்றவை விவரிக்கப்பட்டு உள்ளன.

தாமரையில் அமர்ந்து இருந்த விஷ்ணுவின் நாபியில் இருந்து தோன்றியவர் பிரும்மா. அவருடைய மனதில் இருந்து தோன்றியவரே அத்ரி முனிவர். அடுத்து பிரும்மாவின் கண்ணில் இருந்து தோன்றியவர் சோமா.அந்த வம்சத்தில் பிறந்தவர்தான் மன்னன் சோமேஸ்வரா. அவருடைய புதல்வர் நரசிம்மா. அவருடைய எதிரிகளுக்கு அவர் சிம்ம சொப்பனமாக இருந்தார். அவருடைய நன்கொடைகளில் இருந்து கல்பக விருஷ்சம் தோன்ற கூடவே குபேரனும் வந்தார். மற்றும் அந்த கடவுளின் நெற்றிப் பொட்டில் இருந்து வெளிவந்த சிவன்தான் வல்லாள தேவனாக அவதரித்தார். அவருடைய தந்தை நிர்மாணித்த ஹோய்சாலா சமராஜ்யத்தில் இருந்த அருணசமுத்திரா என்ற தலைநகரில் இருந்து வந்தார். அந்த ராஜ்ஜியம் செல்வம் படைத்து செழிப்பான பூமியாக இருந்தது.

அருணாசல புராணம் தொடர்கின்றது:-



அவருக்கு மற்றவர்களுடைய பொருட்களில் ஆசைகள் இருந்தது இல்லை. அவருடைய மனைவிகளைத் தவிற மற்ற பெண்கள் அனைவரையும் தன்னுடைய சகோதரிகளாகவே கருதினார். சட்டத்திற்கு உட்பட்டு தன்னுடைய வருமானத்தில் ஆறில் ஒரு பங்கை வரியாக



செலுத்தினார். தன்னுடைய தொண்டையில் விஷத்தை தக்க வைத்துக் கொண்டிருந்த கடவுளை மிக உயர்வாக கருதி அவருடைய ஆலயத்திற்கு நிறைய தானம் செய்தார். அவருடைய ஆலய திருப்பணிகளை பின்னர் கூறுகிறேன். முதலில் அவர் விதித்திருந்த வரிமுறைகளைப் பற்றிக் கூறுகின்றேன். 1341 ஆம் ஆண்டில் செதுக்கப்பட்டுள்ள கல்வெட்டு 303 அவர் விதித்திருந்த சில முக்கியமான வரிகளை விவரிக்கின்றன.

1) தட்டானுக்கு வரி
2) தையல்காரருக்கு வரி
3) எண்ணை செக்குகளுக்கு வரி
4) தறிக்கு வரி
5) மீன்பிடிப்பு வரி
6) கதவுக்கு வரி
7) கண்ணாடி வைத்திருப்பவருக்கு வரி
8) சொந்த நிலத்தில் வசிப்பவருக்கு வரி
9) கிராம அதிகாரிகளுக்கு மக்கள் செலுத்த வேண்டிய வரி
10) அரசுக்கு எருதை தானமாகத் தருபவர்களுக்கு வரி
11) தங்கமாக வரி செலுத்த வேண்டும். – அது எதற்கு எனத் தெரியவில்லை
12) அனைவரும் அரசுக்கு பொருட்களைவ வரி என்ற பெயரில் கொடுக்க வேண்டும்.

இவற்றைத் தவிற மன்னன் வல்லாளன் பெயரில் விஷேச யுத்த வரி விதிக்கப்பட்டு இருந்தது.

எந்த மன்னனும் தனக்கு கிடைக்கும் வருமானத்தினைக் கண்டு திருப்தியுறுவது இல்லை, அவர்களுடைய மக்களும் அதிக வரி செலுத்த விரும்புவது இல்லை. 1341 ஆம் ஆண்டில் திருவண்ணாமலை அரசம் அதில் விலக்கு பெறவில்லை. “ நாட்டு வினியோகம் ” என்ற பெயரில் வரி வசூல் குறைந்த பொழுது அதை ஈடுகட்டும விதத்தில் வரியும் விதிக்கப்பட்டது . எந்த அளவில் அது வசூலிக்கப்பட்டது எனத் தெரியாததினால் எல்லப்ப நாயனார் கூறிய ஆறில் ஒரு பங்கு வரி விகிதம்



அதற்கு கடைபிடிக்கப்பட்டதா எனத் தெரியவில்லை. வரிகள் மிக அதிகம் இருந்தாலும் திருவண்ணாமலை மக்கள் அந்த மன்னனை மனம் குளிர வரவேற்றனர். அந்த ஆலயத்திற்கு கிடைத்த இராஜாங்க மானியத்தினாலும் வந்து கொண்டிருந்த சிப்பாய்கள், அரசு ஊழியர் போன்றவர்களினால் கிடைத்த நகர் நுழைவு வரியினால் பொருளாதார நிலைமை அந்த நகரை மேம்படுத்தியது.

456

இந்த இடத்தில் பசுக்களும் வேங்கைகளும் ஒன்றாக உலவித் திரிந்தன. ஒரே குளத்தில் நீர் பருகின. பிராமண பண்டிதர்கள் வேதங்கள் ஓத, மற்றவர்கள் அதை ரசித்துக் கேட்டனர். பழம் பெரும் பெருமைக் கடவுளுடைய அருளைப் பெற, நகரை மக்கள் தோரணம் கட்டி அலங்கரித்து, அரிசி மாவினால் வண்ண வண்ணக் கோலம் போட்டனர்

457

வருடத்தில் மும்மாரி மழை பொழிந்தது. எவருக்கு உணவு தேவையாக இருந்ததோ அவர்களுக்கு ஆறுவித சமையல் உணவு வழங்கப்பட்டது. தபம் செயது கொண்டு இருந்தவர்களுக்கு அவர்கள் கேட்டதை எல்லாம் கொடுத்து அவர்களுடைய அருளைப் பெற்றனர். சிவன் ஆலயத்தில் நெய் விளக்கு ஏற்றி தினமும் பூஜைகள் நடந்தன.

458

கடவுள் விருப்பம் போல அந்த நகரில் அனைத்தும் செழித்து விளங்கின. ஆந்த மன்னனுக்கு வேண்டிய அனைத்தும் கிடைத்தும் கூட அவனுக்கு பிற்காலத்தில் தன் புகழைக் கூற ஒரு மகன் இல்லையே என்ற குறை



இருந்தது. "அவன் பெயரைக் கூற என்றால் அவனுக்கு இறுதிக் கடன்கள் செய்ய" என்று அர்த்தம். தன்னுடைய தந்தையை நல்ல முறையில் மேலுலகம் அனுப்ப வேண்டும் எனில் இறந்து போனவனுடைய மகன் அவனுக்கு இறுதிக் கடன்கள் செய்ய வேண்டும் என்பது ஐதீகம்.

அருணாசல புராணத்தின் முக்கியமான நோக்கமே மன்னன் வல்லாளனுக்கு ஒரு மகன் வேண்டும் என்ற தவிப்பை வெளிப்படுத்துவதே. ஆனால் அவன் திருவண்ணாமலைக்கு வந்த பொழுது அவனுக்கு ஏற்கனவே ஒரு மகன் இருந்திருந்தான் 1311 ஆம் ஆண்டு மாலிக் கபூர் துவார சமுத்திராவை கைபற்றிய பொழுது அவன் மன்னன் வல்லாளனுடைய மகனைப் பிணைக் கைதியாகப் பிடித்தச் சென்று இருந்தான்.அப்படி செய்தால்தான் அந்த மன்னன் ஒழுங்காக ஒப்பந்தத்தின்படி நடப்பான் என அவன் நம்பினான். விருபக்ஷ வல்லாளன் என்ற அந்த மகனை பிணைக் கைதியாக பிடித்து வைத்திருந்தாலும் அவனை நல்ல முறையிலேயே நடத்தினான். 1313 ஆம் ஆண்டு மே மாதம் ஆறாம் தேதி அவனை மீண்டும் துவாரசமுத்திராவுக்குத் திருப்பி அனுப்பினான். அந்த நிகழ்ச்சியைக் கொண்டாடும் வகையில் ஸ்ரீரங்கப்பட்டினத்தில் குடாலியில் இருந்த இராமநாதக் கடவுளுக்கு நிறைய நன்கொடைகளை அந்த மன்னன் அளித்ததாக அந்த கல்வெட்டுக் கூறியது. விருபக்ஷ வல்லாளன் தன்னுடைய தந்தைக்குப் பின் அரியணை ஏறியதும் நீண்ட காலம் ஆட்சி செலுத்தி வந்தான்.

ஆனால் திருவண்ணாமலையில் வல்லாளன் இருந்த பொழுது தனக்கு ஏன் மகன்வேண்டும் என விரும்பினான். ஏன் எனில் தனக்குத் தகுந்த மகன் வேண்டும் என அவன் நினைத்து இருக்கலாம். தன்னுடைய முதல் மகன் மீதான திறமையில் வல்லாளனுக்கு நம்பிக்கை இல்லவே இல்லை. அதனால் இராஜ்ய பரிபாலனத்தில் அவனுக்கு எந்த முக்கியத்துவமும் கொடுத்தது இல்லை.

ஒரு இடத்தில் இருந்து மற்றோரு இடத்திற்கு படைகளை கொண்டு செல்ல பல மாதங்கள் பிடித்த அந்த



காலத்தில் உள்ளூரில் ஏற்படும் சங்கடங்களையும் சண்டைகளையும் திறமையாக சமாளித்து அடக்க தகுதி வாய்ந்த படைவீரர்கள் தேவைப்பட்டனர். அப்படிப்பட்ட ஆட்கள் வல்லாளனின் படையில் நிறையபேர் இருந்தனர். அவர்களுக்கு அந்தப் பொறுப்புக்களைத் தந்த வல்லாளன் அப்படிப்பட்டவர்களில் ஒருவனாக தனது மகனை கருதவில்லை. 1309 ஆம் ஆண்டில் தனது மருமகன்களிடம் அதிக நம்பிக்கை வைத்திருந்தான். 1328 ஆம் ஆண்டில் தனது இரண்டு மருமகன்கள் மற்றும் மற்ற பிரிவில் ஐவர் என ஐந்து நபர் அமைச்சரவையை வைத்திருந்தான். மன்னன் இல்லாத நேரங்களில் தன்னிச்சையாக முடிவு எடுக்க அவர்கள் அனைவரையும் அவன் அனுமதித்து இருந்தான்.



எட்டுபேர் உள்ள சிலைகள்

அருணாசலேஸ்வராவில் உள்ள நந்தி மண்டபம் அவன் முலம் கட்டப்பட்டதே ஆகும். அந்த நந்தியின் பீடத்தின் கீழ் இரண்டு பிரிவாக எட்டுபேர் உள்ள சிலைகள் உள்ளன. அதில் இருவர் அந்த மன்னனுடைய மருமகன்கள், மற்ற ஐவரும் அமைச்சர்கள்.



1340 ஆம் ஆண்டுவரை விருபக்ஷ வல்லாளனுக்கு முடி கூட்டக் கூட இல்லை. அவனிடம் மன்னனுக்கு இருந்த அவ நம்பிக்கையை அது காட்டியது. அந்த வருடத்தில் மன்னன் வல்லாளனுக்கு எழுபத்தி எட்டு வயதாயிற்று. அவன் தன்னுடைய வாரிசாக நியமிக்க தகுந்த மகன் இல்லை. மன்னன் தன்னுடைய மகன் மீது வைத்திருந்த எண்ணப்படியேதான் விருபக்ஷ வல்லாளன் IV அரியணை ஏறியதும் ஹோசலா ஆட்சி சிதறத் துவங்கி பல இடங்கள் வடக்குப் பகுதிகளில் ஆட்சிகளைப் பிடித்தபடி வந்து கொண்டிருந்த விஜயநகர மன்னர்களிடம் வீழ்ந்தன.

முன்னன் வல்லாளன் மிகவும் திறமை மிக்க மன்னன். முதலில் ஆட்சியில் அமர்ந்ததும் அவனுடைய உறவினர்கள் உள்நாட்டு யுத்தம் போல போர் கொடி தூக்க அவற்றை திறமையாக அடக்கி ஒடுக்கினான். 1327 ஆம் ஆண்டில் பறிபோன, பின்னர் 1327 ஆம் ஆண்டில் அழிந்து போன தலைநகரை மீட்டு அர விஸ்தரித்தான். சுற்றிலும் இருந்த இந்து மன்னர்கள் ஆட்சி விழுந்த பொழுதும் ஹோய்சாலா அரசின் தனித் தன்மையைக் காப்பாற்றி வைத்திருந்தான். அவனுக்கு எப்போது அடிபணிய வேண்டும், எப்போது அடக்க வேண்டும், கூட்டணி வைக்க வேண்டும், கூட்டணியை உடைக்க வேண்டும் எப்போது எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்று நன்கு தெரிந்து இருந்தது. எப்படி செய்தால் வெற்றி தோல்வி கிடைக்கும் என அவனுக்கு நன்கு தெரிந்து இருந்தது.

1292 ஆம் ஆண்டு முதல் 1342 ஆம் ஆண்டுவரை ஆட்சியில் இருந்த ஐம்பது ஆண்டுகளில் தானே தனியாக அனைத்து சங்கடங்களையும் சமாளித்தவனின் மனதில் எழுந்த ஒரு வேதனை,“ நான் இறந்தப் பின் யாரை ஆட்சியில் அமர்த்துவது ?” ஹோசலா அரசாட்சி 300 ஆண்டுகளுக்கு மேல் நிலைத்து இருந்தாலும் விருபக்ஷ வல்லாளனைவிட தகுதியானவன் ஆட்சியில் அமரவில்லை எனில் அது நிலைக்காது என எண்ணினான்.



தகுதியான வாரிசு இல்லை என்பதினால் ஆந்த எண்பது வயதில் அமைதியான வாழ்க்கை மேற்கொண்டு இருக்க முடியாமல் தானே குதிரையில் ஏறி யுத்தகளம் சென்று யுத்தம் புரிய வேண்டிய நிலையில் இருந்தான். அருணாசல புராணத்தில் உள்ள மேலும் சில செய்திகள்:-

459

அவன் தன்னுடைய அமைச்சர்களிடம் கேட்டான் " நான் செய்யும் சிவ பூஜையில் தவறு செய்து விட்டேனா ? நான் ஆட்சியில் தவறு ஏதும் செய்கின்றேனா ? நான் பூஜைக்குப் பறிக்கும் பூக்களில் அழுகியவை இருந்திருக்குமா ?, அமைச்சர்களே நான் என்ன செய்ய வேண்டும் என்று கூறுவலீருகளா ?

460

அமைச்சர்கள் கூறினர் " மன்னா, நம்மிடம் வந்து யாசகம் கேட்கும் ஏழை மக்களுக்கு தாராளமாக தானம் செய்தால் முக்கண்களைக் கொண்டவனும் நம்மை காத்தருள்பவனுமானவன் கருணைப் புரிந்து விரைவில் உங்களுக்கு நல்ல மகனைத் தருவான்.

அந்த நகரில் இருந்த ஏழைகளில் அபய இல்லங்களுக்கு மன்னனின் மான்யம் கிடைத்தது என கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. 301 ஆம் எண் கல்வெட்டின்படி 200 ஏழைகள் இருப்பிடமாகக் கொண்டிருந்த அபய இல்லத்திற்கு 800 பவுன் தரப்பட்டது என தெரிவிக்கின்றது. 302 ஆம் கல்வெட்டில் ஒரு இடத்தில் இருந்த அனாதை இல்லம் பற்றி தெரிவத்தது என்றாலும் அது சேதம் அடைந்து எழுத்துக்கள் அழிந்து இருந்ததினால் சரிவர படிக்க முடியாத நிலையில் இருந்தது.

வல்லாளன் செய்த தானம் பொன் என்பதாகவே இருந்தது. முதலாம் உலகப் போருக்குப் பின் தொகுக்கப்பட்ட



சென்னை பல்கழக தமிழ் மொழி அகராதியில் ஒரு பொன் என்பதின் மதிப்பு 1.25 ரூபாயாக இருந்தது எனத் தெரிவிக்கின்றது. அது தவறாக இருக்கும் . ஏன் எனில் அந்த காலத்தில் ஒருவனுடைய வார சம்பளம மட்டும அந்த அளவு இருந்து இருக்கையில் தங்க நாணயத்தின் மதிப்பு குறைவாக தெரிவிக்கப்பட்டு இருந்தது. தங்க நாணயம் நிச்சயமாக அத்தனை குறைவான மதிப்பில் இருந்திருக்க முடியாது என்பது என் கருத்து. ஆகவே தமிழ் மொழி அகராதியில் கூறப்பட்டு உள்ளதை நான் நம்பவில்லை.

461

அந்த அரசன் அறிவித்தான் “ எனக்கு நல்ல பெயர் நிலைக்க வேண்டும் என்பதற்காக தோரணங்கள் கட்டி முரசடித்து அறிவிப்பு செய்யுங்கள். அருணைக் கடவுள் குடியிருக்கும் இந்த நகரில் நுழைந்து எவர் எதைக் கேட்டாலும் அது கிடைக்கும் ”

462

அதற்கு அந்த அமைச்சர்கள் கூறினர் ” உலகெங்கும் நற் பெயர் வியந்து படர்ந்துள்ள மன்னனே, சாஸ்திரங்கள் புகழ்ந்து போற்றும் அந்தக் கடவுளின் பாதங்களில் வந்து வணங்கும் எவரும் என்ன வேண்டுமானாலும் கேட்டால் அதைக் கொடுக்கும் சக்தி நமக்கு உள்ளதா ? ”

463

அரசன் கூறினான் “ இந்த உலகில் இல்லாத ஒன்றை எவரேனும் வந்து கேட்பார்களா ? அப்படி கேட்டால் அதைக் எவராலும் கொடுக்க முடியாது. ஆகவே விரைவாகச் சென்று நான் கூறியதைச் செய்யுங்கள். ” அதை ஏற்ற அமைச்சர்கள் உடனடியாக கொடி ஏற்றி,



அந்த செய்தியை அறிவிக்க முரசு அடிக்க ஏற்பாடு செய்தனர்.

464

அருணையின் மன்னன் விடுத்த செய்தியைக் கேட்ட உலகெங்கும் இருந்த மக்கள் தங்களுடைய வறுமையை நிவர்த்தித்துக் கொள்ள யாசகம் கேட்க அந்த ஊருக்கு வந்தனர். வயதானோர், காவடி எடுத்து வந்தோர், வேதம் ஓதும் பிராமணர்கள், பிச்சைக்காரர்கள், பாடுபவர், சுற்றித் திரிந்த நாடோடிகள் என பெரும் திரளான மக்கள் அங்கு வந்தனர்.

465

திருமணத்திற்கு ஆயிரம் பொன், வீட்டை அடமானம் வைத்துவிட்டவர்கள், கடன் பெருகி நிலத்தையும் நகைகளையும் மீட்க முடியாதவர்கள் எனப்பட்டவர்களுக்கு இரண்டாயிரம் பொன் , பூணூல் போட வந்த பிராமணனுக்கு முன்னூறு பொன் என தானம் செய்தான்.



## பாகம் - 2

## நான்தான் இந்த கோபுரத்தைக் கட்டினேன் என்ற தலைகனம் பிடித்திருந்தவனுக்கு அருணாசலேஸ்வரா தக்க பாடம் புகட்ட எண்ணினார்

இப்படி ஒரு பிரகடனம் செய்யப்பட்டதாக எந்த கல்வெட்டு ஆதாரமும் இல்லை. ஆனால் 1317 ஆம் ஆண்டில் கிடைத்த 301 ஆம் கல்வெட்டு அவன் ஆற்றிய ஆலயப் பணிகளை பற்றி நிறைய விவரிக்கின்றது.

1317 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 ஆம் தேதி அண்ணாமலையில் உள்ள தேவர்களின் கடவுளுக்கும் உண்ணாமலை நச்சியாருக்கும், அவர்களுடைய சன்னிதானதிகளை மூன்று வேளைகள் அலங்கரிக்கவும், கார்த்திகை தீபத்தில் ஐந்து பௌர்ணமியில் விளக்கு ஏற்றவும், ஜியேதிஷ்டா மாதத்தில் பன்னிரண்டு நாட்கள் விளக்கேற்றவும் இந்த நன்கொடை கொடுக்கப்படுகின்றது. இந்த நன்கொடை சூரியனும் சந்திரனும் பிற நட்சத்திரங்களும் இந்த பிரபஞ்சத்தில் இருந்து மறைந்து அழிந்து போகும் வரை தொடர்ந்து கொடுக்கப்படும்.

1317 ஆம் ஆண்டு மாசி மாதம் இருபத்தி இரண்டாம் தேதியன்று ஐந்து பௌர்ணமியின் தீப ஒளி நாட்களுக்கும், அவர்களுக்கு படைக்கப்படும் நேவித்தியங்களுக்கும் தேவையான 10,000 பொன்களை அருணகிரி அண்ணாமலை நாயனாருக்கும், உண்ணாமலை நச்சியாருக்கும் ( ஆலயம் ) மன்னன் வல்லாளன் வழங்கினான்.

இந்த 10,000 பொனகளை வீர வல்லாளதேவன் பெயரில் கொடுத்து அதை மூன்று வேளை நேவித்தியங்களுக்கும் வருடத்தில் 366 நாட்களுக்கும் விளக்கேற்றும் திரிக்கும ஆகும் செலவிற்காக தந்திருந்தான்.



கல்வெட்டு எண் 301 மேலும் தெரிவித்த செய்திகள் இவை.

- வருடாந்திர திரு உலாவிற்கு 400 பொன்
- ஆலயத்தில் வேலை செய்தவர்களக்கு 474 பொன்
- ஆலய பாத்திரங்களுக்காக 647 பொன்

கல்வெட்டு எண் 302 அந்த மன்னன் ஆலயத்திற்கு செய்த மற்ற சேவைகளைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. வேதங்கள் ஓதுதல், தண்ணீர் வசதி, பாக்கு தருபவர், உடலுக்கு ( சிலைகளுக்கு ) புச்சு, ஊதுபத்திகள், குடை செய்வோர், மண்டபத்தில் பணி புரிவோர், தண்ணீர் கொண்டு வருபவர், துணிகள் துவைப்பவர், முடி வெட்டுபவர், பிராமணர்களுக்கு போஜனம் தருகின்றவர்கள், பால் தருபவர், ஆலய திருவிழாக்கள் போன்றவற்றுக்கு அவர் மானியம் தந்தார் என குறிப்பிடுகின்றது. அப்படி தான் செய்தவை என்றும் நிலைத்து நிற்கும் என மன்னன் வல்லாளன் நம்பினான். அதற்கேற்ப அவன் கூறியதாக ஒரு கருத்தை கல்வெட்டு எண் 301 குறிப்பிடுகின்றது.

உலகில் சந்திரனும் , சூரியனும் உதிக்கின்றவரையில் இந்த தான தருமங்கள் தொடர்ந்து நடைபெற வேண்டும். இந்த தருமத்தை கடை பிடிக்காமல் இருப்பவன் கங்கையில் ஒரு பிராமணனைக் கொன்ற தோஷத்தை அடைவார்கள் என்பது மட்டும் அல்ல அவனுடைய தாயாரின் கணவனாகவே கருதப்படுவான்.

ஆக மொத்தம் 30,000 பொன் அந்த ஆலயத்திற்கு அந்த மன்னன் கொடுத்ததாக கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. அந்தப் பணம் பக்கத்து ஊர்களில் இருந்து எல்லாம் நன்கொடைகள் என்ற பெயரில் பெறப்பட்டன என அந்த கல்வெட்டில் குறிப்பிடப்பட்டு உள்ளது. அத்தனை நன்கொடைகளும் பக்கத்தில் இருந்த ஊர்களில் இருந்தே பெறப்பட்டது என்பதினால் மன்னன் வல்லாளன் இருந்த இடம் வளமான பூமியாகவே இருந்திருக்க வேண்டும். அதனால்தான் தன்னுடைய நாட்டை மிகவும் நன்றாக பரிபாலனம் செய்ய முடிந்தது.



அத்தனைப் பெரிய பணத் தொகை நாட்டைப் பாதுகாக்கும் பணிக்கான படைகளுக்குத் தேவையாக இருந்த வேளையில் அந்த மன்னன் ஏன் அவற்றை ஆலயத்திற்கு செலவு செய்தான் ? அதற்கு சில காரணங்கள் இருந்திருக்கலாம்.

ஒருவேளை தான் இந்து மன்னனாக இருந்ததினால் தலைநகரில் இருந்த ஆலயத்தின் மேம்பாட்டிற்கு அதை நன்கொடையாக பெற்று இருக்கலாம். ஏன் எனில் அவனுக்கும் அந்த நேரத்தில் கடவுள் அனுக்கிரகம் தேவையாக இருந்தது. ஆகவே அதற்கு ஆகும் செலவைப் பற்றி அவன் பொருட்படுத்தவில்லை. அவன் செய்து வந்த சில பூஜைகள் பகவானிடம் அவன் முழுமையாக சரண் அடைந்த நிலையைக் காட்டின. அந்த பூஜைகளை செய்வதின் மூலம் நிறைய புண்ணியம் கிடைக்கும்.

இவற்றைத் தவிற அவன் பெரும் பக்திமானாக இருந்ததாகவோ இல்லை வேறு பெரிய புண்ணிய காரியமோ, செயலையோ செய்திருந்ததாக கல்வெட்டுக்களில் ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆனால் அவன் பெரிய இந்து சம்ராஜ்யத்தை நிலை நிறுத்த தன்னை ஈடுபடுத்திக் கொண்டவன். அதனால் அவன் முஸ்லிம் மன்னர்களுடன் யுத்தம் செய்து இந்து தர்மத்தைக் காக்கப் போராடினான். அவைகளைத் தானே தன்னுடைய முயற்சியினால் செய்து முடித்தான். தன்னால் ஒரு காரியம் செய்ய முடியாமல் போனால் எந்த ஒருவனும் அடுத்து நாடுவது தெய்வத்தின் துணையையே. அதே சமயத்தில் எதை எல்லாம் தாமாகவே செய்து கொள்ள முடியுமோ அவற்றைத் தானாகவே செய்து கொண்டு விடுவார்கள். மன்னன் வல்லாளன் தனக்கு ஒரு திறமையான வாரிசு வேண்டும் என விரும்பினான், ஆனால் அதை அவனால் செய்து கொள்ள முடியவில்லை.

அருணாசலப் புராணம் என்பது ஒரு இலக்கியப் பெட்டகம். அதில் காணப்படுபவை ஒன்று அதிக மிகைப்படுத்திக் கூறப்பட்டு இருக்கலாம், அல்லது சிறிதளவு கற்பனையைக் கொண்டும் இருக்கலாம், ஆனால்



அதில் எழுதப்பட்டுள்ளவை அனைத்தும் உண்மை அல்ல என்றும் கூற முடியாது. முக்கியமாக தனக்கு ஒரு வாரிசு வேண்டும் என்பதற்காக அந்த மன்னன் தன்னுடைய கஜானாவையே காலி செய்தான் என்பதும் பொய்யல்ல. அந்த மன்னன் ஆலயத்திற்கு செய்த நற்பணிகளை விளக்கும் கல்வெட்டுக்கள் இவை :

466

மணி மண்டபமும், வெளிச் சுவர்களும் பழுதடைந்து விட்டன. கடவுளே எனக்கு நிறைய பொருள் உதவி கிடைக்க நீ தான் வழி செய்ய வேண்டும். அந்த அரசன் உடனே 2,000 பொன் கொடுத்துவிட்டு கூறினான் " உடனே அவற்றை சரி செய்ய காரியம் செய்யவும் " அதை தவிற 50,000 பொன்கள் அந்த மானிலத்தில் இருந்த பிற மடங்களுக்கும் கொடுக்கப்பட்டன.

அந்த கல்வெட்டில் இருந்த ஒரு பிழை என்ன என்றால் அந்த மன்னன் எந்தெந்த கட்டிடங்களைப் புதுப்பித்தான் என்பதை குறிப்பிடாததே. நாலாவது பிராகாரத்தின் கிழக்குப் பகுதியில் இருந்த் கோபுரத்தின் பெயருக்கு மன்னனுடைய பெயர் வைக்கப்பட்டு இருந்தது. ஏன் எனில் அந்த கோபுரத்தை அவன்தான் சீரமைக்க பொருளுதவி செய்தவன். அந்த மண்டபத்தில் சிலருக்கு ஆறு பொன் கொடுத்த கதைப் பற்றிக் கூட எழுதப்பட்டு இருக்கையில் இத்தகைய செய்தியை அதில் எழுதாமல் விடப்பட்டு இருந்தது ஏன் எனத் தெரியவில்லை.

அடுத்த ஒன்பது கல்வெட்டுகளில் அவன் கட்டிடப் பணிகளுக்குத் த்நத சிறிய அளவிலான தொகைகளைப் பற்றியே எழுதப்பட்டு உள்ளன. கல்வெட்டு எண் 301 ல் அவன் எதோ ஒரு கட்டிடப் பணிக்கு 400 பொன் கொடுத்ததாக எழுதப்பட்டு உள்ளது. அந்த கல்வெட்டுக்களின் அடுத்து சில பகுதிகளில் அந்த கோவிலுக்கு வந்து வணங்கியதாகவும் அந்த ஆலயத்தின் சில சுவர்களை எழுப்பவும் 800 பொன் கொடுக்கப்படடு



இருந்ததாகவும் எழுதப்பட்டு உள்ளது. அதனால்தான் 466 ஆம் பாடலில் அந்த சுவர் எழுதப்பட்டுள்ளதைக் குறித்து எழுதி இருக்கலாம். வல்லாளன் கோபுரச் சுவரை சரி செய்ய கொடுத்த அந்த தொகை மிகவும் குறைவானதே.

அந்த கோபுரத்தைப் பற்றிய சரியான செய்தி 1341 ஆம் ஆண்டில் செதுக்கப்பட்ட கல்வெட்டு எண் 302 ல் உள்ளது. அதில் கூறப்பட்டு உள்ளதில் படிக்க முடிந்த வார்த்தைகள் என்ன எனில் "..........ஆலய சீரமைப்பு, மற்றும் கோபுரம், அதைச் சுற்றி உள்ள சுவற்றை சீரமைக்க..........." அதன் ஆரம்பத்திலும் , முடிவிலும் உள்ள வார்த்தைகள் சிதைந்து போய் இருப்பதினால் அந்த வார்த்தைகள் என்னவாக இருந்து இருக்கும் என்றுஊகிக்க முடியவில்லை. அந்த பணிக்கு தரப்பட்ட தொகை எத்தனை எனவும் தெரியவில்லை. தொகை பெரியதாக இருந்திருந்தால் அதைப் பற்றி பெரிய தொகை என குறிப்பிடப்பட்டு இருந்திருக்கும். அது மட்டும் அல்ல சீர் அமைக்கப்பட்டது எந்த கோபுரம் என்பதையோ, எந்த சுவர் என்றோ கூட குறிப்பு இல்லை. ஆகவே அந்த கோபுரத்தையும் , அதன் பக்கத்தில் இருந்த சுவரையும் வல்லாளன் சரிவரக் கட்டினான் என்று அதில் எதுவும் கூறப்படாததினால் அந்த இரண்டையும் அந்த மன்னன் கட்டினான் என்பது சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் ஏற்றுக் கொள்ள முடியாது.

அருணாசல புராணமும் சரி அந்த ஆலயத்தில் உள்ள கல்வெட்டுச் செய்திகளும் சரி வல்லாளனை மிகவும் புகழ்ந்து எழுதி உள்ளன. ஆனால் அவை இரண்டிலுமே அவன் எந்த பகுதிகளை சீரமைத்தான் என குறிப்பான இடங்களை விளக்கவில்லை என்பதினால் அவன்தான் அந்த ஆலயத்தை புதுப்பித்தான் என்பதை ஒப்புக் கொள்வது கடினமாக உள்ளது.

எது எப்படி இருந்தாலும் அந்த கோபுரத்தின் பெயர் அவன் மீதான பெயராக இருப்பதினால் அதைக் கட்டியபின் அந்த மன்னன் வேறு என்ன செய்தான் என்பதை உள்ளுர் கதைகள் விவரிக்கின்றன.



அந்த கோபுரத்தைக் கட்டி முடித்தப் பின் மன்னன் வல்லாளன் அதைப் பற்றி பெருமையடித்துக் கொண்டான். இந்த பெரிய கோபுரத்தை நான்தான் கட்டினேன் என தற்பெருமையடித்துக் கொண்டு தலை கனம் பிடித்து அலைந்தான். ஆகவே அவனுக்கு ஒரு பாடம் புகட்ட கடவுள் எண்ணினார்.

அருணாசலாவில் பத்து நாள் விழா நடப்பதுண்டு. அவரை திருவண்ணாமலை வீதிகள் வழியாக உலா எடுத்துச் செல்வது உண்டு. அந்த கோபுரம் கட்டப்பட்ட முதலாம் ஆண்டில் அந்த கோபுர வாசல் வழியாக அருணேஸ்வராவை வெளியில் எடுத்து வர இயலவில்லை. அடுத்த ஒன்பது நாட்களும் அவரை இன்னொரு பகுதி வழியாகவே அழைத்து வந்தனர். பத்தாவது நாள் அந்த மன்னன் தன்னுடைய பிழையை எண்ணி வருந்தினான். அவன் கடவுள் முன்பு அழுது புலம்பி மயங்கி விழுந்து விட்டான். அந்த ஒரு நாளாவது தான் கட்டிய கோபுர வாசல் வழியாக வருமாறு அவரை வேண்டினான். கடவுளும் அவன் திருந்தியதைக் கண்டு மனம் நெகிழ்ந்து அன்று அந்த கோபுர வாசல் வழியாக வெளியில் வந்தார். அதைக் குறிக்கும் விதத்தில் அமைந்துள்ள அந்த பண்டிகை இன்னமும் திருவண்ணாமலையில் நடை பெறுகின்றது. பத்தாவது நாள் முடிவில் உலா அந்த பேகாபுரத்தின் வாசல் வழியாகதான் எடுத்து வரப்படுகின்றது.

வல்லாளன் கோபுரம் மற்றும் அதன் சுற்றுச் சுவர்களைத்தை தவிற அந்த மன்னனுடைய மானியத்தால் அது பெற்ற மற்ற வசதிகளும் உண்டு. அவருக்கு பல சிலைகள் உள்ளன. அவற்றில் ஒன்றுக்கு தினமும் மாலை போடப்பட்டு வருகின்றது. ஒரு சிலை தாடியுடனும், மற்றோன்று ஒரு மனைவியுடனும், இன்னும் ஒன்று மிகவும் வயதானவனாகவும் வடிவமைக்கப்பட்டு உள்ளது. நந்தி சிலையையும் அந்த கிளி கோபுரத்திற்கு கிழக்கில் உள்ள மண்டபத்தையும் அவன் கட்டினான். வலது பக்க மண்டப துாணில் அவன் உருவம் செதுக்கப்பட்டு இருக்க



இடப்புறம் ஹோசலா நாட்டு சின்னம் செதுக்கப்பட்டு உள்ளது. இனி மீண்டும் அருணாசல புராணத்தில் செல்வோம்.

467

தேவைப்பட்டவர்களுக்கும், அனாதைகளுக்கும், குருடர்களுக்கும் குறையின்றி அந்த மன்னன் தானம் செய்வதைக் கேள்விப்பட்ட நாரதர் அவனைக் காண வந்தார்.

468

அந்த மாபெரும் முனிவர் வருவதை அறிந்த மன்னன் தன்னுடைய சிம்மாசனத்தில் இருந்து இறங்கி வந்தான். புதிய ஆசனம் செய்து அவரை அந்த ஆசனத்தில் அமரச் செய்த பின் அவன்பேசத் துவங்கினான்.

469

மாபெரும் முனிவரே, பிரும்மாவின் தபஸ்ஸினால் பிறந்தவரே, அற்புதமான வீணையை கையில் ஏந்தி உள்ளவரே , தாங்கள் இந்த தாழ்ந்தவனின் குடில் தேடி வரக் காரணம் என்ன ? முனிவர் கூறினார்.

470

ஐம்புலன்களையும் அடக்கிய மாமுனிவர்கள் போற்றிய அக்னி, சந்திர, சூரிய வம்சத்தில் ஒன்றான அக்னி வம்சத்தில் பிறந்தவனே, தன்னலமின்றி நீ தரும் கொடைகளைப் பற்றி நான் கேள்விப் பட்டேன். அதைக் கேட்டதினால் உன்னைக் காண இங்கு வந்தேன். உன் மனதில் என்ன குறை என்று எனக்குக் கூறுவாயா ?



471

மாமுனிவரே, அனைத்து சாஸ்த்திரங்களும், வேதங்களும் போற்றிப் புகழும் முனிவரே, எனக்குப் பிறகு இந்த நாட்டை திறமையாக ஆளத் தகுந்த மகன் எனக்கு இல்லையே என ஏங்கி, அழகிய கூந்தலை உடையவளை தன் உடலில் பாதியாகக் கொண்டவரின் கருணையை வேண்டி,தான தருமங்களை செய்யக் கொடி பிடித்தேன். அவருடைய எண்ணம் என்னவோ தெரியவில்லை.

472

நாரதர் கூறினார் " தர்மங்களை எவன் அப்பழுக்கின்றி செய்கின்றானோ அவனுக்கு நல்ல மகன் பிறப்பான் என தர்ம சாஸ்திரமும் படித்தப் பண்டிதர்களும் கூறுகின்றனர். தலையில் பிறைச் சந்திரன் மற்றும் கங்கையை முடித்து வைத்துள்ளவனுடைய அருளினால் நிச்சயமாக உனக்கு நல்ல மகன் பிறப்பான். நான் சென்று வர விடைக் கொடு.

473

மனம் மகிழ்ந்து போன மாமுனி கைலாயம் சென்று சிவபெருமானிடம் நடந்ததைக் கூறச் சென்றார். வழி எங்கும் சிவகணங்கள் நின்று கொண்டு இருக்க பகவானைத் துதித்துப் பாடியபடி நந்தீஸ்வரரை வணங்கி, தன்னை சுற்றிலும் ரிஷிகள் சூழ அமர்ந்திருந்த கடவுளிடம் அவர் கூறலானர்:

474

ஜோலிக்கும் கைலாயத்தில் அமர்ந்துள்ள கடவுளுக்கும் கடவுளானவரே உன் பாதத்தை வணங்குகின்றேன். அருணை என்ற இடத்தில் உலகில் இருந்து எந்த மூலையில் இருந்தும் தன்னை அண்டி வேண்டினால் கேட்டதைத்



தருகிறேன் என்று கூறி அதை நிறைவேற்றி வரும் வல்லாளன் என்ற மன்னன் தனக்குப் பிறகு தன் பெயர் கூற ஒரு பிள்ளை வேண்டும் என வேண்டுகின்றான். அந்த மன்னனின் நற்பண்புகளைக் கேளுங்கள்.

475

அவன் உண்மையையே பேசி நீதியை நிலை நாட்டுபவன். நன்நெறியில் இருந்து வழுவாதவன். அஆக்கிரமத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட அவதரித்தவன். உலகில் உள்ள அனைத்தையுமே தன்னைப் போல எண்ணி நடப்பவன். அவன் உங்களுடைய அடிமை. அனுதினமும் உங்களை "முதற்பொருளே, உன்னிடம் சரண் அடைந்தேன் " என துதிப்பவன். நாரதர் அவனைப் பற்றிக் கூறியதாக செய்தி தரும் கல்வெட்டுக்களில் உள்ளவற்றில் இதோ சில :

-மகர சாம்ராஜ்யத்தை அழித்தவன்.

-திருவண்ணாமலை நகரைச் சேர்த்து அமைந்து இருந்த மாகடா என்ற நகரை அழித்ததாகக் கூறப்பட்டாலும் அதை எப்பொழுது, எங்கே அழித்தான் என்பது கூறப்படவில்லை.

- பாண்டிய மன்னன் அதை அவனுக்குக் கொடுத்ததாக கூறப்பட்டாலும் அவன் தருவதற்கு முன்பே அந்த நகரை தான் அபகரித்துக் கொணடு விட்டதையே அதை அழித்துவிட்டான் எனக் கருதப்பட்டது போலும்.

-பாண்டிய குடும்பத்தை தூக்கி நிறுத்தியவன்

-சோழ சாம்ராஜ்யத்தை நிறுவியவன்

-பாண்டிய சாம்ராஜ்யத்தை நிறுவியவன்

1317 ஆம் ஆண்டு தமிழக பகுதிகளில் இருந்த மன்னர்களில் அவனே முக்கிய நபராக விளங்கியவன். பாண்டிய நாட்டு மன்னர்கள் தெற்குப் பகுதியில் சிறு இடங்களை மட்டும் வைத்திருக்க மற்ற மன்னர்கள் அனைவரும் அவனிடம் அடிபணிந்து தங்களுடைய நாட்டில் பதவியை அடுத்த வம்சங்களுக்கு மாற்றிக் கொள்ள அவனுடைய உதவியையே நம்பி இருந்தனர்.



கல்வெட்டு 303 ல் உள்ளவை இவை:

5 கடவா மன்னனை துன்புறுத்தியவன்

6 கோம்கானாவின் சக்ரவர்த்தி

7 சோழ, மாலவா, கௌடா மற்றும் குஜ்ஜாரா நாடுகளை வென்றவன்.

இந்த கல்வெட்டு 1341 ஆம் ஆண்டில் இருந்து துவங்குவதால் அவை அவனுடைய புதுப் பெயர்கள் மற்றும் 1317 முதல் 1341 ஆம் ஆண்டுவரை அவன் வென்ற நாடுகள் அவனுக்குக் கிடைத்த மற்ற பட்டப் பெயர்கள் இவை

8 மன்னாதி மன்னன்

9 மன்னர்களின் மாபெரும் தலைவன்

10 ஈடு, இணையில்லா மன்னன்

11 எங்கும் நிறைந்தவனின் தலை முடியில் உள்ள கிரீடம் போன்றவன்.

12 எதிரிகளை அழித்தவன்

13 எவருடைய உதவியும் தேவைப்படாதவன்.

14 யானைப் போன்ற எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவன்.

15 அழகில் மன்மதன்

16 அளவுக்கு மீறிய பலம் படைத்தப் பேரரசன்



## பாகம்-3

## அவன் இறந்து போனால் சிவபெருமான் வேத காரியங்களை செய்வார் என்று கொடுக்கப்பட்ட வாக்குறுதியின் நினைவாக ஒரு விழா இன்றும் திருவண்ணாமலையில் நடைபெறுகின்றது.

303 ஆம் கல்வெட்டில் உள்ளது இது. சனிவார சித்தி என்று சனிக்கிழமைகளில் பெரும் நன்மைகளை செய்தவன். அந்த நாட்களில் அவன் அப்படி என்ன செய்து விட்டான் என்பது விளக்கப்படவில்லை.

476

தன் முன் வந்து நின்ற ரிஷிமுனி கூறியதைக் கேட்ட சிவன் நினைத்தார். அந்த வல்லாளன் யார் என நானே சென்று பார்க்கின்றேன் . அவர் உடனே அங்கு கூடி இருந்த ரிஷி, முனிவர்களை நிங்கள் உங்களுடைய இருப்பிடங்களுக்குத் திரும்பச் சென்று விடுங்கள் எனக் கூறினார்.

477

உடனடியாக கைலாசத்தின் அதிபதி அளகாபுரி மன்னனை அழைத்தார். ( குபேரன்) . அந்த மன்னனும் பெரிய தங்க மூட்டையுடன் அங்கு வந்து கழுத்தில் நல்ல பாம்பையும், ருத்திராஷ்டிரத்தையும் அணிந்த அவருடைய பாதங்களை வணங்கி நின்றபடி நிற்க, சிவப்பு நிறத்தவர் கூறத் துவங்கினார்:



478

அழகாபுரி மன்னனே நான் அருணையில் நெறி வழுவாமல் நடந்து வரும் ஒரு மன்னனை சோதிக்க விரும்புகின்றேன். ஆகவே நீ என்னுடைய சிஷ்யனைப் போல உரு மாறி நிறைய பொருட்களை எடுத்துக் கொண்டு என்னுடன் வரவேண்டும் என கைலாசநாதர் கூறினார்

479

கற்பனைக் கெட்டாத அளவு ஜொலிக்கும் ஒருவளை தன் ஒரு பாகமாக வைத்திருக்கும் பரமேஸ்வரர் ஒரு சிவ துறவியான சங்கமாவைப் போல உரு மாற்றம் கொண்டதும் அதைக் கண்டு பிரும்மாவும், விஷ்ணுவும் பரவசம் அடைந்தனர். வேதங்கள் அவரை போற்றி வணங்க அனைத்து தேவர்களும் அவர் மீது மலர் மாரிப் பொழிந்தனர்.

480

அனைத்து சிவ கணங்களும் சிவபெருமானுடைய அருளினால் ஆண்டி போல மாறிக் கொள்ள, வழி நெடுக வல்லாளனுடைய பெருமைகளைப் பேசியபடி அவர்கள் அந்த மன்னன் இருந்த நகரை அடைந்தனர்.

481

அவர்கள் வழி நெடுக கூவிக் கொண்டு சென்றனர் “ கணவனை கடவுளாக மதிக்கும் பெண்கள் இங்கு உண்டா ? அழகில் சிறந்த ஆண்களும் உண்டா ? நீதி தவறாமல் நடக்கும் மன்னன் உண்டா ? எங்களை கனிவுடன் அழைத்து உணவு தரும் மனதுடைய பெண்கள் எவரும்தான் இங்கு உண்டா ?



## 482

எங்களுக்கு தங்கமாக கொடுத்தாலும் அது வேண்டாம், நகை நட்டுக்கள் தருகின்றீர்களா, வைர வைடூரியம் தருகின்றீர்களா அதுவும் வேண்டாம். இந்த அரசையே கொடுத்தாலும் அதுவும் வேண்டாம். எங்களுக்குத் தேவை வயிறாற உண்ண உணவும் பாதுகாப்புமே.“

## 483

அழகிய இளம் பெண்களை தேவதாசிகள் என்ற பெயரில் ஆலயங்களுக்கு அர்பணித்து விடுவது உண்டு. அவர்கள் ஒரு விதத்தில் பார்த்தால் விலை மாதுக்களைப் போன்றவர்கள்தாம். அவர்களடைய வருமானம் ஆலயத்தின் பணிகளுக்கச் சென்றுவிடும். பிரிடிஷ் அரசினர் அந்த தேவதாசி முறையை ஒழிக்க நினைத்தனர். ஆனால் அதை முற்றிலும் ஒழிக்க முடியவில்லை. அந்த பழக்கம் இன்னமும் கர்நாடகாவின் சில பகுதிகளில் உள்ளது.

1292-3 ஆம் ஆண்டுகளில் சீனாவுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய மார்க்கோ போலோ என்ற யாத்ரீகர் வல்லாளனின் ஆரம்ப கால ஆட்சியின் பொழுது அங்கு வந்தார். அவர் பெண்களை ஆலயங்களுக்கு காணிக்கையாக கொடுத்து வந்த அந்த நிலைமையை பற்றி எழுதினார். அவருடைய குறிப்புக்கள் அங்கிருந்த பொருளாதார, கலாசார நிலையைப் பற்றி எடுத்துக் கூறியது. அந்த நாட்டில் பொன்னும் , குதிரைகளும் நிறைந்திருந்து வளம் மிக்க பூமியாக இருந்தது என எழுதினார். தென் இந்திய மன்னர்கள் குதிரைகளைப் பாதுகாக்கத் தெரியாமல் அடிக்கடி நிறைய குதிரைகளை அரபு தேசங்களில் இருந்து இறக்குமதி செய்தனர் என்ற அவருடைய குறிப்பு அந்த காலத்தில் நிலவிய கருத்தை ஊர்ஜிதம் செய்வது போல இருந்தது. 1311 ஆம் ஆண்டு படை எடுப்பில் மாலிக்கபூர் கொள்ளை அடித்துச் சென்ற 20,000 குதிரைகள் தென் பகுதியில் இருந்த



மன்னர்களுக்கு பெரும் பலவீனத்தை ஏற்படுத்தியது. இந்த காலத்து வாழ்கையுடன் ஒப்பிட்டால் வல்லாளனுடைய படையிருடைய வாழ்க்கை முறை பெரிதும் மாறுபட்டு இருந்தது என்றாலும் அவர்கள் கலாசாரம் நன்கே இருந்தது. மார்கோ போலோவின் செய்தியின்படி இன்றைக்கு எப்படி ஒரு சாதாரண குடிமகன் இருக்கின்றானோ அப்படித்தான் அந்த கால மக்களும் இருந்திருந்தனர் எனத் தெரிகின்றது. அவர்கள் தங்களுடைய வீடுகளில் சாணி பூசி மெழுகுவார்கள். மன்னன் முதல் ஆண்டி வரை அனைவரும் தரையில்தான் அமருவது வழக்கம். ஆணோ பெண்ணோ, தினம் இருவேளை குளிப்பதுண்டு. ஒவ் ஒருவரும் குடிநீர் குடிக்கும் பாத்திரம் வைத்துக் கொண்டு, அனேகமாக அவரவர்களுக்கென தனித்தனியான பாத்திரம் வைத்துக் கொண்டு, அதன் மூலமே நீர் பருகுவார்கள். பருகும் நீரை உதட்டில் படாமல் வாயின் மேல் தூக்கி வைத்தபடி பருகுவர்.

உதடெல்லாம் சிவந்த பழங்களைப் போன்று தோற்றம் தந்த தேவதாசிகள் நிறைந்திருந்த அந்த நகரில் ஒரு சங்கமாவைப் போல வேடம் பூண்டு வந்த சிவபெருமான் தன்னுடைய சின்னஞ்சிறு வாயினால் பசி தாங்க முடியாத ஒரு பிச்சைக்காரன் உணவு கேட்டு கத்துவதைப் போல கூவினார்.



அழகுப் பெண்களே, மீனைப் போன்ற விழியும், கிளியைப் போன்ற பேச்சும், சந்திர பிம்பம் போன்ற முகமும், தலை முழுவதும் பூக்கள் அணிந்து, சந்தன மணம் வீசும் வழுவழுப்பான தேங்காய் போன்ற தனங்களைக் கொண்டவர்களே , மன்மதனின் ஐந்து அம்புகளை விலகுவது போல என் காம இச்சையை அழித்துக் கொள்ள இரவு முழுவதும் உங்களுடன் தங்கி சல்லாபிக்க எத்தனை தங்கம் வேண்டும் ?



485

தேவதாசிகள் கூறினர் " கழுத்தில் பாம்பைச் சுற்றிக் கொண்ட பரமசிவனைப் போல தோற்றம் தருபவரே, நாங்கள் பொய் சொல்வதில்லை, ஏமாற்றுவதும் இல்லை. ஒரு இரவுக்கு ஒருவளுக்கு ஆயிரம் பொன் கொடுத்தால் இரவெல்லாம் நாங்கள் உங்கள் உடலுடன் விளையாடி உங்கள் காம இச்சையை ஒழிப்போம்

486

சிவனும் தேவதாசிகள் கேட்டபடியே பொருளைத் தந்து ஒவ்வொரு சிஷ்யனுக்கும் ஒரு பெண் எனத் தேர்ந்து எடுத்து இரவு முழுவதும் அவர்களுடன் இருக்குமாறு தன் சிஷ்யர்களுக்கு கண்ஜாடை இட்ட பின் அவர்களை அனுப்பினார். அந்த தேவதாசிகள் இருந்த தெருவு ஆட்டமும் பாட்டுடனும் இரவு முழுவதும் சிவகணங்களும் தேவதாஸிகளும் களித்திருந்த இடமாயிற்று.

487

ஒரு தேவதாஸியைக் கூட விட்டு வைக்காமல் அவர்கள் அனைவரையும் ஒவ்வொருவருடனும் வளைத்துப் போட்டார் சிவபெருமான். அதன் பின் தன்னுடைய சிஷ்யன் போல வந்து இருந்த அளகேசனுடன் மன்னனின் அரண்மனைக்குச் சென்றார் சிவபெருமான். அவர்களைக் கண்ட மன்னன் நல்ல முறையில் வரவேற்று அவர்களை உள்ளே அழைத்துச் சென்று அமரச் செய்த பின் கேட்டான்:

488

தெய்வப் பிறவிகளே. உங்களுடைய பொற் பாதங்கள் இந்த இடத்திற்கு வர நான் என்ன தவம் செய்தேனோ, நான் அப்படி என்ன நல்ல காரியங்களை



செய்திருக்கின்றேன். என்னால் முடிந்த அளவுக்கு உங்களுக்கு என்ன தேவையோ அதைத் தருகின்றேன். உங்களுடைய கருணையைப் பெறும் பாக்கியத்தை செய்துள்ள நான் நீங்கள் என்ன கேட்டாலும் அதை நான் தருகின்றேன்.

489

சிவன் கூறினார் " மன்னா, உன்னுடைய நல்ல பணிகள் செழிக்கட்டும். நான் வந்தது முக்கியமான ஒரு வேலைக்காகவே. ஐந்து அம்புகளை ஏவும் காமனைப் போல கொழுந்து விட்டு எரிந்து கொண்டு இருக்கும் என் காம இச்சையைத் தீர்த்துக் கொள்ள எனக்கு ஒரு பெண்ணைத் தர முடியுமா ? அப்படித் தந்தால் ஏழு கடலும் தாண்டி உன் பெருமை விளங்கும்.

490

மன்னன் கூறினான் " நான் அதை விட நிறையவே செய்கின்றேன். உடனே அழகிய பெண்களைத் தேடிப்பிடித்து உங்களுக்கு மணம் முடிக்கின்றேன். சிவபெருமான் கூறினார் " திருமணம் வேண்டாம். அது பெரிய தொந்தரவாகிவிடும். தேவதாசிகளால் மட்டுமே அப்படிப்பட்ட சுகத்தைத் எனக்குத் தர இயலும் "

491

சங்கமா. அனைவருக்கும் புத்தி புகட்டுபவரே, உங்கள் விருப்பப்படியே ஒரு தேவதாஸியை அழைத்து வர ஏற்பாடு செய்கிறேன் என்று கூறிவிட்டு தன்னுடைய படையினரை அழைத்து உடனே நகரில் சென்று அழகிய தேவதாசி ஒருவளை அழைத்து வர அனுப்பினான். காற்றை விட வேகமாக அவர்கள் சென்றனர்.



492

அவர்கள் எந்த தேவதாஸிகள் வீட்டிற்கு சென்றாலும் அங்கே அந்த தேவதாஸிகள் கொங்கைப் பூக்களை அணிந்து கொண்டு சிவ கணங்களை பரவசப்படுத்திக் கொண்டு இருந்ததைக் கண்டனர். அவர்கள் அழைத்தால் வருவதற்கு ஒரு தேவதாஸி கூட கிடைக்கவில்லை. வருத்தத்துடன் அந்த செய்தியைக் கூற அவர்கள் மன்னனிடம் சென்றனர்.

493

தன்னுடைய படை வீரர்கள் கூறியதைக் கேட்ட மன்னன் கோபமுற்றான். அமைச்சர்களைப் பார்த்து கத்தினான் “இப்படித்தான் நான் கொடுத்த வாக்கு பொய்யாக வேண்டுமா ? நான் செய்த பூஜையில் தவறு நிகழ்ந்து விட்டதா ? ஒரு தேவதாஸியும் கிடைக்கவில்லை என்பதினால் சங்கமாவிடம் என்னால் எந்த தேவதாஸியையும் அழைத்து வர முடியவில்லை என்று கூறமுடியுமா ?

494

அமைச்சர்கள் கூறினார்கள் “ மன்னா கவலைப்பட வேண்டாம். நாங்கள் உங்களுடைய சேவகர்கள். நாங்கள் சென்று எவரையாவது அழைத்து வருகிறோம். அவர்கள் தேவதாஸிகள் இருந்த விட்டிற்கு சென்று அந்த வீட்டிற்குள் நடை பெற்றுக் கொண்டு இருந்த நிகழ்ச்சிகளை பார்த்தவண்ணம், தங்களுடைய உருண்டுத் திரண்டிருந்த மார்பகங்களில் மணம் புசி நின்ற தேவதாஸிகளிடம் கேட்டனர்:



495

இந்த தெருவில் அடுத்தடுத்து வசித்து வரும் தாமரைப் பூப்போன்ற கண்களைக் கொண்ட பெண்களே, எங்கள் மன்னனிடம் வந்துள்ள ஒரு பண்டிதருக்கு இரவெல்லாம் காமத்தை தணிக்க வல்லமைப் படைத்த எந்த ஒரு பெண்ணாவது வந்தால் அவளுக்கு நகை நட்டுக்கள், பவழம் போன்றவற்றால் செய்த வளையல்கள், ஆறுவித சமையல்களை தயிர், நெய், பால் போன்றவற்றுடன் அனு தினமும் உண்ண அறுசுவை உணவு ஏற்பாடு செய்து தரப்படும்.

496

அதைக் கேட்டப் பெண்கள் கூறினர் " நாங்கள் இன்று இரவு முழுவதும் மகிழ்விக்க இங்கு வந்துள்ளவர்களிடம் ஏற்கனவே பணத்தைப் பெற்றுக் கொண்டு விட்டோம். இன்று இரவு கழிந்ததும் நீங்கள் அழைக்கும் இடத்திற்கு வருகின்றோம். அதைக் கேட்ட அமைச்சர்கள் மிகவும் மனம் வேதனை அடைந்துப் போய் மன்னனிடம் சென்று நடந்ததைக கூறினர்.

497

என்ன இது , இத்தனை சிறிற விஷயத்தினை செய்ய முடியாமல் போய்விட்டதே. இதுவும் கடவுளின் சித்தமோ ? சிவனைப் போலவே இங்கு வந்துள்ள சங்கமாவிற்கு நான் என் வாக்கைக் காப்பாற்ற வேண்டும். இப்படியாக நினைத்தபடி, வில்லும் அம்பையும் ஏந்தியபடி அவன் தேவதாஸிகள் இருந்த தெருவிற்கு சென்றான்.



498

அங்கு சென்றவன் அவர்களிடம் கூறினான். “என்னிடம் வந்து கேட்பவர்களுக்கு அவர்கள் வேண்டியதைத் தருவதாக உறுதி கூறி கொடி ஏற்றி விட்டேன். என்னிடம் வந்து வேண்டிய சங்கமாவிற்கு நான் கொடுத்த வார்த்தையைக் இன்று காப்பாற்ற எந்த தேவதாஸி வருகின்றாளோ அவளுக்கு என் இராஜியத்தைக் கொடுக்க தயாராக இருக்கின்றேன

499

யானைகள், குதிரைகள் மற்றும் எத்தனை தங்கம் வேண்டுமோ அத்தனையும் தருகின்றேன். முத்துக்களால் ஆன பல்லக்கில் அவர்களை அழைத்துச் செல்கின்றேன். இந்த இராஜியத்தை ஆள அவளுக்கு அதிகாரம் தந்து அவளுக்கு நானே பணி புரிந்து என் தாயாராக அவளை ஏற்றுக் கொள்வேன்.

500

உலகில் வேதங்களில் சிறந்து உள்ள அத்தனை ரிஷிகளும் அனைத்து இன்பஙகளைவிட இப்படிப்பட்ட இன்பம் தருவதே உத்தமமானது எனக் கூறுகின்றனர். தயவு செய்து எவராவது வந்து இதை செய்வீர்களா ?”

501

அந்த பெண்கள் கூறினர் ” உங்களுடைய சட்டத்தை மதித்து நடப்பவர்கள் நாங்கள். இங்கு வந்துள்ளவர்களிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு வாக்கும் தந்து விட்டோம். அப்படி இருக்கையில் அதை நாங்கள் மீறலாமா ? அதனால் வெட்கப்பட்ட மன்னன் தன் அரண்மனைக்குச் சென்றான்.



502

அவனுக்கு நல்லம்மா தேவி, மற்றும் சல்லம்மா தேவி என்ற இரு அழகிய மனைவிகள் உண்டு. அவருடைய கால்களில் விழுந்து வணங்கிய அவர்கள் அவனுடைய வாடிய முகத்தைக் கண்டு அவனுடைய வருத்தத்திற்கான காரணத்தைக் கேட்டனர். நேர்மையான வழியில் நடந்து கொண்டு இருந்த அந்த வல்லாளன் கூறினான்.

503

“இன்று ஒரு புண்ணியாத்மா இந்த மன்னனிடம் வந்து தனக்கு இன்பம் அனுபவிக்க அழகிய மான் போன்ற கண்களைக் கொண்ட ஒரு பெண் வேண்டும் எனக் கேட்டான். அவர் கேட்டதிற்கு இணங்கி நான் தேவதாஸிகளிடம் சென்று அழைத்தும் எவரும் வர முடியாத நிலையில் வேறு ஒருவருடன் இருக்கின்றனர். அதுவே என் வருத்தத்தின் காரணம். அதைக் கேட்ட அவனுடைய இளம் மனைவி கூறினாள்.

504

காமத்தால் தவிப்பவனுக்கு ஒரு பெண்ணை தருவதாக வாக்கு தந்து விட்டவரே, உங்கள் மனதில் என்ன இருக்கின்றது என எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் நீங்கள் அனுமதித்தால் நான் இன்று இரவு அவருக்கு என்னைத் தந்து விடுகின்றேன், என இளம் மனைவி கூற மனம் மகிழ்ந்த மன்னன் கூறினான் “ சிறப்பான குணம் படைத்தவளே, அந்த சங்கமாவின் அறைக்குச் சென்று அவருடைய காம இச்சையை அழித்து விடு ” அதைக் கூறிய பின் சங்கமாவிடம் சென்ற மன்னன் அந்த ஏற்பாடு குறித்துக் கூறினான்.

1335 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டில் அந்த மன்னடைய மனைவி குறித்து எழுதப்பட்டு உள்ளது



என்றாலும் பெயர் குறிப்பிடப்படவில்லை. அவனுக்கு இரண்டு மனைவிகள் இருந்து இருக்கலாம் என்றாலும் அதற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

கோபுரத்தின் மேற்குப் பகுதியில் உள்ள மண்டபத்தில் தன் மனைவியுடன் வல்லாளன் இருக்கும் சிலை உள்ளது. அந்த மண்டபத்தின் வெளியில் உள்ள பதினாறு கால் தூணில் தென் பகுதியில் உள்ள தூணில் ஹோய்சலா ராஜிய சின்னம் உள்ளது. வடக்கு நோக்கி உள்ள தூணில் வல்லாளனின் மனைவியின் சிலை, சிங்கங்களின் தலை மீது உள்ளது. அவள் நடுத்தர வயதானவளாக தோற்றம் தருகின்றாள். சிவன் மற்றும் பார்வதியை கூப்பிய கைகளுடன் வணங்கிய நிலையில் நிற்கின்றாள்.

505

சல்லம்ம தேவி உடனேயே நறுமணம் மிக்க நீரில் குளித்து அழகாக உடை உடுத்திக் கொண்டு அந்த துறவி இருந்த அறைக்குள் சென்றாள். அதி அற்புதமாக வீணையை இசைத்து மனதை மயக்கும் பாடலைப் பாடினாள். ஆவள் பாடியபடி அந்த துறவியின் அருகில் சென்று அவருடைய கண்களை நோக்கிய பொழுது அவர் ஆழ்ந்த தியானத்தில் இருந்ததைக் கண்டாள்.

506

அவரை கவர்ந்து மகிழ்வூட்டுவதற்காக நறுமணம் மிக்க தண்ணீரை அவர் மீது தெளித்தப் பின் பேச முயன்றாள். ஆனால் அவர் தனது கண்களைத் திறந்து அவளைப் பார்க்கவில்லை. ஆகவே சிறிது தயங்கியவள் பேசத் துவங்கினாள்.



507

என் தலைவனே, மன்னன் கொடுத்த வாக்குறுதி நிறைவேறாமல் போகலாமா ? இப்படிக் கூறியவள் அவரை நோக்கிக் குனிந்து அவரைக் கட்டி அணைத்தாள். உடனேயே பரமேஸ்வரன் ஒரு குழந்தையாக மாறி அவளை மகிழ்ச்சியூட்ட அழத் துவங்கினார்.

508

சிவன் அப்படி குழந்தை வடிவாகி அழுததைக் கேட்ட மன்னன் அது சிவனுடைய நாடகமே என கண்டு பிடித்து உடனே உள்ளே வந்து அந்த குழந்தையை வாரி அணைத்து நெற்றியில் முத்தமழைப் பொழிந்தான். அந்த ஆனந்த நிலையில் அவன் இருந்த பொழுது அந்தக் குழந்தையும் மறைந்தது.

509

கடவுளே ஒன்றும் அறியாத நாங்கள் உன்னுடைய சித்தத்தைப் புரிந்து கொள்ளவில்லை. மூன்று கண்களை உடையவரே, வேதங்கள் போற்றுபவரே, புனிதமானவரே, நீங்கள் ஏன் குழந்தையாக மாறி உடனே மறைந்து விட்டீர்கள் ? இனி எங்கள் கதிதான் என்ன என்று புலம்பினர்

510

அழுதழுது மன்னன் வலிமை இழந்தான். அப்படி கதறுகையில் பார்வதியுடன் நந்தி மீதேறி பரமசிவன் அவன் முன் தோன்றினார். அவரைச் சுற்றி சிவ கணங்களும் பிரும்மா, விஷ்ணு போன்றோரும் வந்தனர். அவர்களை கீழே விழுந்து மன்னன் நமஸ்கரித்தான்.



511

இவ்வுலகைப் படைத்தவரே உம்மை நமஸ்கரித்தோம். பக்தர்களைக் காத்தருளியவனே, உன்னை நமஸ்கரித்தோம். உம்மிடம் நாங்கள் சரண் அடைந்தோம். கங்கையையும், பிறைச் சந்திரனையும் முடியில் முடித்து வைத்துள்ளவரே, உம்மிடம் சரண் அடைந்தோம். எங்களை நீதான் காத்தருளி எனக்குப் பின் இந்த நாட்டை ஆள நல்ல ஒரு மகனைத் தரவேண்டும்.

512

அழகிய மன்னனே, இதைக் கேள். நானே உனக்கு மகனாக இருக்கின்றேன். நான் உனக்கு ஈமக்கிரியைகளை செய்வேன். அப்படிக் கூறிய பின் அவனை வாழ்த்தி அருள் புரிந்து விட்டு சிவனார் கைலாயம் சென்று விட்டார். அதன் பின் வெகு காலம் அந்த மன்னன் நேர்மையாக ஆண்டு வந்தான்.

சிவபெருமான் அவனுக்கு மகனாகி இறுதிக் கடன்கள் செய்வேன் எனத் தந்த வாக்குறுதியை நினைவில் கருதி இன்றும் அந்த நன்நாளில் விழா கொண்டாடப் படுகின்றது. மாசி மாதத்தில் அருணாசலேஸ்வர் சன்னிதியில் அந்த மன்னன் மரணம் அடைந்த செய்தி படிக்கப் படுகின்றது. திருவண்ணாமலையில் இருந்து மூன்று கல் தொலைவில் உள்ள பளிகோண்டப்பட்டு என்ற இடத்திற்கு அவருடைய சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகின்றது. அங்கு அவனுக்கு சிரார்தம் செய்யப்படுகின்றது. ஆனால் அந்த மன்னனுடைய மரணத்திற்கும் அந்த கிராமத்திற்கும் என்ன தொடர்பு உள்ளது என்று தெரியவில்லை. அவன் அங்கு வசித்திருக்க முடியாது. ஏன் எனில் அந்த ஆலயத்தில் இருந்து ஒரு மைல் தொலைவில்தான் அவனுடைய மாளிகை இருந்தது. சுமார் நூறு ஆண்டுகள் முன்பு அவன் இருந்த மாளிகையின் சில பகுதிகள்



வெளியில் தெரிநது கொண்டு இருந்தாலும் விழுப்புரம்-திருப்பதி இரயில் நிலையத்தின் பாதை அமைத்தப் பின் அந்த இடத்தை சீரமைத்து விட்டதினால் கொஞ்சநஞ்சம் தெரிந்த மாளிகையும் மறைந்து விட்டது.

1342 ஆம் ஆண்டுவரை வல்லாளன் நல்ல முறையில் ஆண்டு வந்தான். மதுரையில் இருந்த மன்னர்களுடன் அவன் கடைசியாக யுத்தம் செய்த பொழுது அங்கிருந்த பாண்டிய அரசனை டில்லி சுல்தான் தோற்கடித்து அந்த இடத்தை கைபற்றி இருந்தான். அந்த மதுரையைப் பிடித்த முகலாய மன்னன்- சுல்தான் ஜல்லாலுதின் ஹஸன் ஷா- டில்லி சுல்தானிடம் இருந்து தான் சுதந்திரம் பெற்றதாக அறிவித்துக் கொண்டு விட்டான். அவனை பத்து வருடத்திற்குப் பிறகு அவனுடைய ஒரு அமைச்சனே கொலை செய்து விடடு ஆட்சியை கைபற்றினான். புதவி ஏற்றதும் ஹோசலா ராஜியத்தைப் பிடிக்க அதுவே சிறந்த தருமணம் என அதன் மீது படை எடுத்தான். திருவண்ணாமலையை நோக்கி படையுடன் சென்று கொண்டு இருக்க அங்கே அவனை எதிர்க்க வல்லாளன் தயார் நிலையில் நின்றிருந்தான். அந்த சுல்தான் வந்து கொண்டு இருந்த பொழுது மதுரைப் படையினரின் தாக்குதலில் அந்த சுல்தான் மரணம் அடைய, அவனுடைய படைகள் தலைவன் இல்லாததினால் சிதறி ஓடின. யுத்தம் நின்றது.

அந்த நிலையை சாதகமாக பயன் படுத்திய வல்லாளன் கண்ணனுார் மீது படை எடுத்தான். 1340-41 ஆம் ஆண்டு ஆறு மாத காலம் அந்த கோட்டையை முற்றுகை இட்டு இருந்தான். அதனால் அவனுடைய எதிரிகள் யுத்த நிறுத்தத்திற்கு வேண்டுகோள் விடுத்துவிட்டு மதுரையில் இருந்த தங்கள் சுல்தானுடன் பேசிவிட்டு சரண் அடைவதாகக் கூறினார். அதை நம்பிய வல்லாளன் அசட்டையாக இருந்து விட்டான். புதிய சுல்தான் கியாஸ்-யுத்தின் யுத்த நிறுத்த வேண்டுகோளை மதித்து நடக்காமல் ஒருநாள் இரவு நேரத்தில் மன்னன் வல்லாளனுடைய படை வீரர்கள் உறங்குகையில்



அவர்களைத் தாக்கி வல்லாளனை சிறைபிடித்துக் கொண்டு மதுரைக்குச் சென்றான்.

முதலில் வல்லாளனை நல்ல முறையில் நடத்தினாலும் அவனுடைய குதிரைப் படைகள், யானைகள், பொருட்கள் என அத்தனையும் பிடுங்கிக் கொண்டு அவனை கொன்று அவனுடைய உடலில் இருந்துத் தோலை உரித்துவிட்டான். அந்த நேரத்தில் அங்கு பயணம் செய்து கொண்டு இருந்த அரபு நாட்டு யாத்ரீகர் அந்த மன்னனின் உடலில் வைக்கோலை அடைத்து மதுரையில் தொங்க விடப்பட்டு இருந்ததை தான் கண்டதாக எழுதி உள்ளார். இப்படியாக மரணம் அடைந்த வல்லாளனுக்குப் பின் பதவிக்கு வந்த அவனுடைய மகன் வல்லாளன் III னுடைய தவறான ஆட்சியினால் ஹோசலா இராஜ்யம் சீரழிந்து போனது.

அந்த மன்னனுக்கு நிர்வாகத் திறமைக் கொண்ட வாரிசு இல்லை என்றாலும் அவனுடைய அரசவையில் ஹரிஹரா என்ற திறமையான அமைச்சர் இருந்தார். அவர் தான் முதலாவது விஜய நகர மன்னன் ஆகி அதை ஆண்டு வந்தார். ஹோசல நாடு சீரழியத் துவங்கிய பொழுது அதை சீர்படுத்த தன்னுடைய இறுதி கால ஆட்சியில் மன்னன் வல்லாளன் அவனிடம் அதிக அதிகாரத்தைத் தந்து இருந்தான். அவனைதான் தனக்குப் பிறக்காத திறமையான மகனாக வல்லாளன் ஏற்றுக் கொண்டு இருந்திருக்கின்றான் என அருணாசல புராணம் மறைமுகமாகக் காட்டி உள்ளது என்றே நான் நினைக்கின்றேன்.

முதலில் சிவபெருமான் திருவண்ணாமலையில் சங்கமா என்ற வீரசைவ துறவி உருவில் தோன்றினார். அந்த வீரசைவப் பிரிவினர் கர்னாடக மானிலத்தில் பன்னிரண்டாம் நூற்றாண்டில்தான் தோன்றினர். அவர்கள் மற்ற இடங்களுக்கும் பரவினாலும் கர்நாடகாவில்தான் வேருன்றி உள்ளனர். எல்லப்ப நாயக்கர் உண்மையைப்



போன்ற கட்டுக் கதையை மையமாக வைத்தே அருணாசலப் புராணத்தை இயற்றி உள்ளார் என்றே நான் நினைக்கின்றேன்.

அந்த நேரத்தில் வள்லால மன்னன் தனக்குப் பிறகு ஆள வலிமையான ஒருவனை தருமாறு கடவுளிடம் வேண்டிக் கொள்ள ஹரிஹர சங்கமா அந்த இடத்தை நிரப்பினான். அருணாசல புராணத்தின் கடைசியில் (512) சங்கமா வெளிப்படுத்தினான் " பலசாலி மன்னனே , இதைக் கேள். நான் உனக்கு மகனானேன்." அவன் மன்னனுடைய சொந்த மகன் இல்லை என்றாலும் வள்லால மன்னனுடைய மகளை மணந்து கொண்டவன்.

ஹரிஹரனும் அவருக்குப் பின் வந்தவர்களும் வெறி பிடித்த இந்து அரசர்கள். தென் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் முஸ்லிம் மன்னர்களை வடக்கு நோக்கி ஓடச் செய்தவர்கள். அவர்கள் ஏழு வருடங்கள் ஸ்திரமான அரசு விளங்க உதவியவர்கள். வள்லால மன்னனுடைய ஆத்மா அதைக் கண்டு நிச்சயமாகப் பெருமைக் கொண்டு இருந்திருக்கும்.

